
# கலைஞரும் நானும்

93

**“தமிழின் மொத்த முகம் கலைஞர்தான். ஒருவரைப் பாராட்ட வேண்டும், உயர்த்த வேண்டும் என நினைத்தால், மனதைத் திறந்து அதைச் செய்வார், தயங்க மாட்டார்” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் எழுத்தாளர், இயக்குநர் ராசி அழகப்பன்.**



# ‘மெய் மறந்து கரம் பற்றி நின்றேன்!’

**ராசி அழகப்பன், இயக்குநர்**

என் பள்ளிப் பருவ காலத்திலேயே கலைஞரின் எழுத்துகள், கவிதைகள் வழி அவரை அறிந்திருக்கிறேன். கலைஞர் கவிதைகளின் வரிகளை மாற்றிப் போட்டு எழுதி, அதற்கு கவிஞர் சுரதா அவர்களிடம் பரிசும் வாங்கி இருக்கிறேன். பின்னர் கல்லூரிக் காலத்தில், அவரின் கரங்களால் கவிதைக்குப் பரிசு வாங்கினேன் என்பது எனக்கு அமைந்த நல் அனுபவம்.

1980–ஆம் ஆண்டு வாக்கில், மாநிலக் கல்லூரியில் தமிழிலக்கியம் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது, மாநில அளவிலான ‘கவிதைப் போட்டி’ ஒன்றில் கலந்துகொண்டு முதல் பரிசுக்குத் தேர்வானேன். பரிசு கொடுக்கப் போவது யார் என்கிற எதிர்பார்ப்பு எழுந்த நிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிகழ்ச்சிக்கு வருகை தந்தார். அவர் கையால் விருது பெற்றது மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருந்தது. விருதினை வாங்கிய பின்னர்தான் உணர்ந்தேன். ‘அடடா, விருது அளித்த அவர் கைகளை நாம் தொடவில்லையே’ என்பது. மீண்டும் அந்த வாய்ப்புக்காக முப்பது ஆண்டுகள் காத்திருந்தேன்.

2009–ஆம் ஆண்டு, வண்ணத்துப் பூச்சி என்கிற திரைப்படத்தை நான் இயக்கி, தமிழ்நாடு அரசின் இரண்டு விருதுகளுக்குத் தேர்வானேன். அன்று முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களின் கரங்களால் விருது அளிக்கப்பட்டது. நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன் எல்லோரும் கலந்துகொண்டிருந்த அந்த மேடையில், கலைஞரின் கரங்களால் விருது வாங்கியபோது, அவரது கரங்களைப் பற்றி என் நன்றியைத் தெரிவித்தேன். அது நன்றி அறிவிப்பதற்கானது மட்டுமல்ல; 1980–ஆம் ஆண்டு அந்தக் கரங்களைப் பற்றுவதை நான் தவற விட்ட வாய்ப்பினை, ஆசையினை 2009–ஆம் ஆண்டு நிறைவேற்றிக் கொள்வதற்கான நிமிடங்கள் அவை.

அந்தக் கரங்களால்தான், ஆயிரக்கணக்கான பக்கங்கள் எழுதினார், அந்தக் கரங்களால்தான் போர்ப் பரணி பாடிய இலக்கியங்கள், புதிய தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான எண்ணற்றத் திட்டங்களை எழுதி இருக்கிறார் என்கிறபோது, அந்தக் கணம் அந்தக் கரங்களைப் பற்றியபோது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மெய் மறந்திருந்தேன். பின்னால் இருந்து, ‘ராசி வாங்க, அடுத்தடுத்து இருக்கிறார்கள்’ எனக் குரல் வந்தபோது, ‘எத்தனை ஆண்டுகள் இந்த கரங்களைப் பற்றுவதற்காகக் காத்திருந்தேன். இது வெறும் கை இல்லீங்க, தமிழ் கை’ என நான் கூறினேன். கலைஞர் என்னைப் பார்த்து, புன்னகைத்து அனுப்பியது மறக்க முடியாத நிகழ்வு. தமிழுக்காகவே தொண்டாற்றிய அரும்பெரும் தலைவரைத் தொடுவது என்பது, வாழ்நாள் பேறு என்றேன்.

## ஆசுவாசப்படுத்திய தமிழ்!

1996–ஆம் ஆண்டு, தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைக்கவிருந்த நேரம். அடுத்த நாள் பதவியேற்பு என்கிற நிலையில், கலைஞர் அவர்களைச் சந்திக்க திரைத்துறையில் இருந்து ரகுவரன், நாசர், இளையபாரதி ஆகியோருடன் நானும் சென்றிருந்தேன். கோபாலபுரம் வீடு, அதிகாரிகள், கட்சியினர் என பரபரப்பாக இருந்தது. கலைஞரின் உதவியாளர் சண்முகநாதன் அய்யா, கலைஞரிடம் கேட்டு எங்களை மாடிக்கு அனுப்பி வைத்தார். அவ்வளவு பரபரப்புக்கு இடையிலும் எங்களிடம் 30 நிமிடங்களுக்கு மேல் பேசிக் கொண்டிருந்தார்.



எல்லோரும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருக்கையில், நான் துடுக்குத்தனமாக, “அய்யா வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் தமிழில் எழுதப்பட வேண்டும் என்பது உங்கள் ஆட்சியிலாவது நிறைவேற வேண்டும். பக்கத்தில் உள்ள புதுச்சேரியில் செயல்படுத்துகிறார்கள், இங்கும் அதை நீங்கள் நிறைவேற்றினால், தமிழ் வளரும்” என்றேன். என்னைப் பார்த்தவர், “என்ன பண்றீங்க, படம் பண்ணிக்கிட்டு இருக்கீங்களா” என்றார். ‘ஆமாம் சார்’ என்றேன். ‘படம் பெயர் என்ன?’ எனக் கேட்டார். “மிஸ்டர் தேவராஜ்” என்றேன். அவர் உடனே “மிஸ்டர் என்பது என்ன தமிழா?” எனக் கேட்டார். அப்போதுதான் எனக்கும் உறைத்தது, நானாக வாய்க் கொடுத்து மாட்டிக் கொண்டேன் என அமைதியாக இருந்தேன்.

உடனிருந்தவர்களும், ‘ஏன் இந்த வேலை?’ என்பதுபோல நினைக்க, என்னை ஆசுவாசப்படுத்துவதற்காக கலைஞர், ‘‘ஒண்ணும் கவலைப்படாதீங்க, அண்ணா சாலையில், அண்ணா அறிவாலயம் இருக்கு. அங்க வாங்க எனக் கட்சித் தொண்டர்களை அழைப்பதற்கு, அவர்கள் மற்றவர்களிடம் ‘மவுண்ட் ரோட்டுல இருக்க நம்ம கட்சி ஆபிஸுக்கு வாங்க’ என்று சொல்வார்கள். அண்ணா சாலை என்று பெயர் வைத்த பின்னர் கூட மவுண்ட் ரோடு என்றுதான் கூறுவார்கள். அதனால், இது காலப்போக்கில் மாறிவிடும். நாங்களெல்லாம் தமிழுக்காகப் போராடியவர்கள். நீங்கள் சொல்வதைப் பரிசீலிக்க வேண்டியதுதான், நிச்சயமாக நான் செய்வேன்” என்றார்.

> **மொழியை ஆயுதமாக்கி, இனத்தைக் காத்த போராளிக்கு என் வாழ்நாளில் நான் செலுத்திய மறக்க முடியாத நன்றி அது.**

நான் கேள்வி கேட்டதை விடவும், நான் மனம் வருந்திவிடக் கூடாது என அவர் அளித்த பதிலில் இருந்த உத்திதான் என்றென்றைக்கும் வியப்பளிக்கக் கூடியது. யார் மனதையும் புண்படுத்திவிடாத தமிழ் அவரது தமிழ்.

## தட்டிக் கொடுத்த பாராட்டுகள்

‘நாயகன்’ திரைப்படத்துக்கான வெற்றிவிழா நிகழ்வுக்கு உலகநாயகன் கமல்ஹாசன் சார்பாக கலைஞர் அவர்களை அழைப்பு விடுக்கச் சென்றிருந்தேன். ‘வருகிறேன்’ என்றவர், ‘நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைப் பார்க்க, ஆற்காட்டார், ஆயிரம் விளக்கு உசேன் ஆகியோரை அனுப்பி வைக்கிறேன்’ என்றார். “இல்லீங்கய்யா, நாங்க பார்த்துக் கொள்கிறோம்’’ என்றேன். “உங்களுக்கு அனுபவம் பத்தாதுப்பா, அனுப்பி வைக்கிறேன்” என்றார். ‘‘வேண்டாங்கய்யா, எங்க அனுபவத்தை நீங்க வந்து பார்க்கணும்” என்றேன். அதற்கு அவர், “பேச்சு அப்படியேதான்யா இருக்கு” எனப் புன்னகைத்து அனுப்பினார்.

‘அபூர்வ சகோதரர்கள்’ திரைப்படத்தின் வெற்றிவிழா வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. அந்தப் படத்தின் துணை இயக்குநராக இருந்த நான், கலைஞரை வரவேற்று, அழைத்துச் செல்கையில் உடனிருந்தேன். ‘தேவர் மகன்’ திரைப்படத்தின் வெள்ளி விழாவுக்கும் வந்து உரையாற்றினார். ‘தேவர் மகன்’ படத்தின் திரைக்கதை மிகச் சிறப்பாக உள்ளது’ என வாழ்த்தினார். பின்னர் நன்றி அறிவித்த கமலஹாசன் அவர்கள், “கலைஞர் அவர்கள் பாராட்டிய, வாழ்த்திய திரைக்கதையில் ராசி அழகப்பனுக்கும் பங்கு உள்ளது” எனக் குறிப்பிட்டார். அந்த மேடையில், கலைஞர் இருக்க, கமலஹாசன் எனது பங்களிப்பைக் குறிப்பிட்டது எனக்கு பெரும் உற்சாகத்தை அளித்தது. கலைஞர் அவர்கள், “அவர் நான் விருது கொடுத்த பையன்” என என்னைத் தட்டிக் கொடுப்பதுபோல பார்த்ததும் மறக்க முடியாத நினைவுகள்.

நான் என் வாழ்நாளில் பெரியாரைச் சந்திக்கவில்லை, பேரறிஞர் அண்ணாவைச் சந்திக்க முடியவில்லை என்றாலும், அவரது உரையை வானொலியில் கேட்டிருக்கிறேன். ஆனால், கலைஞர் அவர்களின் உரையை மேடைகளிலும், வானொலியிலும் கேட்டுப் பழகி இருக்கிறேன். அவரது தமிழைப் பருகி இருக்கிறேன். அவரைச் சந்தித்திருக்கிறேன் என்கிறபோது, தமிழ் மாணவனாக, தமிழ் உணர்வாளனாக பெருமிதமாக உணர்கிறேன்.

அவரது இறுதி நாளன்று தொலைக்காட்சி நேரலையில், இறுதி ஊர்வலக் காட்சிகளை விவரித்து, அவரது தமிழுக்கும், அவர் தமிழருக்குச் செய்ததற்கும் கண்ணீர்ப் பெருக்குடன் என் உணர்ச்சிகளைப் பதிவேற்றிக் கொண்டிருந்தேன். மொழியை ஆயுதமாக்கி, இனத்தைக் காத்த போராளிக்கு என் வாழ்நாளில் நான் செலுத்திய மறக்க முடியாத நன்றி அது.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## திராவிடத்தின் புதிய படைக்கலன்கள்!




‘என் உயிரினும் மேலான..!’ என்பது, முத்தமிழறிஞர் கலைஞரின் உணர்வாற்றல் மிக்கச் சொற்கள். அதையே தலைப்பாகக் கொண்டு மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையிலான இளைஞர் அணி மாநில அளவில், நடத்திய பேச்சுப் போட்டியின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பு விழாவும், இளைஞர் அணியின் தலைமையகம் அன்பகத்தில் இருந்து நடத்தப்பட்டு வரும் முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 9 நூல்கள் வெளியீட்டு விழாவும் இன்று (27.10.2024) காலை 11 மணிக்கு அண்ணா அறிவாலயத்தின் கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமை ஏற்க, கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நூல்களை வெளியிட்டும், போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசளித்தும் சிறப்புரையாற்ற உள்ளார். கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நூல்களைப் பெற்றுக் கொண்டு உரையாற்ற உள்ளார்.

திராவிடக் கொள்கை முழக்கமிடும் புதிய படைக்கலன்களாக உருவாகியுள்ள இந்த இளைஞர் படையும், அவர்களுக்கு கழக வரலாற்றை, கடந்த காலங்களை அறிமுகப்படுத்தும் வாளாகவும், கேடயமாகவும் திகழும் நூல்களும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக்குப் பெருமை சேர்க்கும். அடுத்த அடுத்த தலைமுறைக்கும் திராவிடம் சென்று சேர்ந்து கொண்டிருக்கும் என்பதற்கு, இந்தப் படையும், நூல்களும் சான்று பகரும்.

## ஃப்ளாஷ்பேக்



### மட்டற்ற மகிழ்ச்சி தரும் புகைப்படம்!



சிவ.நாகேந்திரராஜன்

13.10.2015 அன்று ‘நமக்கு நாமே’ என்கிற பயணத் திட்டத்தை அறிவித்து, தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் கள ஆய்வு சென்றார் இன்றைய நமது கழகத் தலைவர் அவர்கள். அதன் ஒரு பகுதியாக நாமக்கல் மாநகருக்கு வருகை புரிந்த கழகத் தலைவர் அவர்களைச் சந்தித்து, முதல் முறையாக நான் புகைப்படம் எடுத்துக் கொண்டேன். தலைவர் அவர்கள் நேரடியாக என்னை அழைத்து ‘வா போட்டோ எடுத்துக்கொள்’ என்று சொன்னார். இன்றைய தினம் அதை எண்ணிப் பார்த்தாலும், எனது மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.

**–சிவ.நாகேந்திரராஜன், துணை அமைப்பாளர், மாவட்டத் தகவல் தொழில்நுட்ப அணி, நாமக்கல் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### முதல் அமைச்சரவை!

1921-ஆம் ஆண்டு, சென்னை மாகாணத்துக்கான சட்டமன்றம் தொடங்கியது. சென்னை மாகாணத் தேர்தலில், நீதிக்கட்சி பெரும்பான்மை பெற்றது. ஆளுநர் வெலிங்டன் பிரபு, நீதிக்கட்சித் தலைவர் தியாகராயர் அவர்களை ஆட்சி அமைக்க, அழைத்தார். தியாகராயரோ தனக்கு அமைச்சர் பதவி வேண்டாம் என்று கூறிவிட்டு, சுப்பராயலுவை முதலமைச்சராகவும், பனகல் அரசரை இரண்டாவது மந்திரியாகவும் சர் கே.வி.ரெட்டியாரை மூன்றாவது மந்திரியாகவும் நியமித்தார். ராஜாஜி சட்டசபைத் தலைவராக ஆளுநரால் நியமிக்கப்பட்டார். இதுதான், சென்னையில் உருவான முதல் அமைச்சரவை.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

642

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.